Baroda BNP PARIBAS MUTUAL FUND

Together for more

# ஒவ்வொரு கனவுக்காகவும் ஆரம்பிப்போம் ஒரு சிறிய எஸ்ஐபி*




**பரோடா பிஎன்பி பரிபாஸ் மியூச்சுவல் ஃபண்டு** வழங்கும் முதலீட்டாளர் தகவல் அறிவு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை

*சீரான முதலீட்டு திட்டம்

## முழுமையான வருங்காலத்திற்காக சிறிய நடவடிக்கைகள் எடுங்கள்

நமது வருங்கால உடைமைகள் நமது கடந்த கால தீர்மானங்களை பொறுத்தவை. நாம் வாழ்நாள் முழுவதும் நமது கனவுகளை துரத்திச் செல்கிறோம், சிலவற்றில் சமரசம் செய்து கொள்கிறோம், சிலவற்றை விட்டு விடுகிறோம் மற்றும் ஒருசிலவற்றை மட்டுமே நிர்வகிக்கிறோம். தற்போது நாம் எடுக்கும் முதலீட்டு தீர்மானங்கள், நமக்கு ஒரு வளமான வருங்காலத்தை உறுதிசெய்ய உதவுவதோடு, நமது கனவுகளை நனவாக்கவும் உதவும். உறுதியான முதலீட்டின் அடிப்படை கொள்கை மிகச்சிறந்த திட்டத்தை தேர்ந்தெடுப்பதில் அல்ல, தொடர்ந்து முதலீடுகள் செய்வதைப் பொறுத்தது. சீரான முதலீட்டு திட்டம் (எஸ்ஐபி) வளமான வருங்காலத்தை உறுதிசெய்ய உருவாக்கப்படும் அத்தகைய பாதையில் ஒன்று என கருதலாம்.

## வாழ்க்கையில் பொதுவான செலவுகள்




அதிகம் என்ற வார்த்தை திட்டத்தினால் கிடைக்கும் அதிக வருமானங்கள் அல்லது திட்டத்தின் செயல்திறனுக்கான வாக்குறுதியை குறிப்பிடுவது ஆகாது. இது பரோடா ஏஎம்சி மற்றும் பிஎன்பி பரிபாஸ் ஏஎம்சி இரு அமைப்புகளையும் தனித்தனியாக ஒப்பிடும்போது, கூட்டு அமைப்பினால் வழங்கப்படும் கூடுதல் மதிப்பு அம்சத்தை குறிப்பிடுகிறது.


## முதலீடு செய்ய ஆரம்பித்தல்



**விரைவாக ஆரம்பியுங்கள்; உங்கள் முதலீடு உங்களுக்காக உழைக்கட்டும்**



**காலப்போக்கில் உங்கள் முதலீடுகளை ஆவரேஜ் செய்யுங்கள்**



**பெரிதாக சிந்தியுங்கள், சிறிதாக முதலீடு செய்யுங்கள், தொடர்ந்து முதலீடு செய்யுங்கள்.**



**சந்தையின் ஏற்றத்தாழ்வை கண்டு ஒதுங்கி விடாதீர்கள்; நிபுணர்கள் உங்கள் முதலீட்டை கவனமாக கையாள விடுங்கள்.**

## எஸ்ஜபி-ன் நன்மைகள்

### ஒழுங்குபடுத்தப்பட்ட அணுகுமுறை

மாதாந்திர முதலீடு போல் உங்கள் பணத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கீடு செய்யுங்கள். எஸ்ஜபி மூலம் நீங்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு முதலீடு செய்வதற்காக உங்கள் விருப்பப்படி ஒரு தொகையை ஒதுக்க வேண்டும். இந்த விதத்தில் நீங்கள் சந்தையின் ஏற்றத்தாழ்வால் லாபம் அடையும் நோக்கத்தை பெறுகிறீர்கள்

### அபாயம் மற்றும் ஏற்றத்தாழ்வு நிர்வாகம்

பொதுவாகவே பங்கு சந்தைகள் ஏற்றத்தாழ்வை சந்திப்பவை. எனவே, அவற்றின் நகர்வுகளை யூகிப்பது கடினமாகிறது. முதலீட்டாளர்கள் அவர்கள் நிதி இலக்குகள் மீது கவனம் செலுத்த வேண்டும். சந்தையின் ஏற்றத்தாழ்வை நிர்வகிக்க, தொடர்ந்து எஸ்ஜபி-ல் முதலீடு செய்வதன் மூலம் முதலீட்டு மேலாளர்களின் தீர்மானத்திற்கு அவற்றை விட்டுவிட வேண்டும்.

### ருப்பி காஸ்ட் ஆவரேஜிங்

சந்தையின் போக்கை யூகிப்பது உங்களின் நேரத்தை வீணாக்குவதோடு அபாயகரமானது. ஒரு மிக வெற்றிகரமான முதலீட்டு திட்டமுறை என்பது ருப்பி காஸ்ட் ஆவரேஜ் முறையை ஏற்றுக் கொள்வதாகும். சந்தைகள் சரியும் போது உங்களுக்கு அதிக யூனிட்கள் ஒதுக்கப்படும் நன்மையும் மற்றும் சந்தைகள் உயரும்போது முதலீடுகள் ஆவரேஜ் செய்யப்படும் நன்மையும் கிடைக்கும்.

### பவர் ஆஃப் காம்பவுண்டிங்

எஸ்ஜபிக்கள் காம்பவுண்டிங் எனும் அடிப்படை கொள்கை மீது செயல்படுகின்றன. நீங்கள் எந்த அளவு விரைவாக முதலீட்டை ஆரம்பிக்கிறீர்களோ அந்த அளவு உங்கள் முதலீடுகள் காம்பவுண்டிங் மூலம் பெருகும் திறன் ஏற்படும். அதாவது உங்கள் வருமானங்கள் மேலும் வருமானங்களை உருவாக்குகின்றன. எஸ்ஜபிகள் மூலம் நீண்டகால முதலீடு உங்கள் முதலீடுகளின் மதிப்பை அதிகரிக்கும் நோக்கம் கொண்டது. இது சந்தையின் போக்கை யூகித்தல் மற்றும் குறுகிய கால ஏற்றத்தாழ்வு போன்ற கவலைகளை ஆவரேஜ் செய்ய உதவுகிறது.

கூட்டின் சக்தியைப் புரிந்து கொள்ள பின்வரும் அட்டவணையைப் பார்க்கவும். இந்த அட்டவணை பல்வேறு முதலீட்டுத் தொகையின் மாதாந்திர எஸ்ஜபி முதலீட்டை காட்டுகிறது.

| எஸ்ஜபி தொகை | 5 ஆண்டுகள் | 10 ஆண்டுகள் | 15 ஆண்டுகள் | 20 ஆண்டுகள் | 25 ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| 5000 | 4.2 Lacs | 12.3 Lacs | 27.6 Lacs | 56.7 Lacs | 1.1 Crs |
| 10000 | 8.5 Lacs | 24.6 Lacs | 55.2 Lacs | 1.1 Crs | 2.2 Crs |
| 15000 | 12.7 Lacs | 36.8 Lacs | 82.8 Lacs | 1.7 Crs | 3.4 Crs |
| 20000 | 16.9 Lacs | 49.1 Lacs | 1.1 Crs | 2.3 Crs | 4.5 Crs |
| 25000 | 21.2 Lacs | 61.4 Lacs | 1.4 Crs | 2.8 Crs | 5.6 Crs |

ஆதாரம்: நிறுவனத்தின் உள்ளேயானது. வளர்ச்சி வீதம் 12.93% என்று கருதப்படுகிறது. அதாவது 01/06/13 மற்றும் 30/05/23 இடையேயான 10 ஆண்டுகளுக்கான சுற்று வருவாய். ஏஎம்எஃப்ஐ-யின் சிறந்த வழக்கங்களுக்கான வழிகாட்டுதல்கள் சுற்றறிக்கை எண் 109/2023-24-ன்படி. கடந்தகால செயல்திறன்கள் எதிர்காலத்தில் எட்டப்படலாம் அல்லது எட்டப்படாமல் போகலாம்.
அவை எதிர்கால வருவாய்களுக்கான உத்தரவாதமும் அல்ல.

அதிக தகவல்களுக்கு மற்றும் அதிகம் தெரிந்துகொள்ள, இன்றே உங்கள் நிதி ஆலோசகர்/ மியூச்சுவல் ஃபண்ட் விநியோகஸ்தரை தெரிந்துகொள்ளவும்!
எஸ்ஜபி, இறங்கும் சந்தையில் இழப்புக்கு எதிராக எந்தவொரு லாபம் அல்லது உத்தரவாத்திற்கு உத்தரவாதம் கொடுக்கவில்லை. நிதி/ ஏஎம்சி எந்தவொரு வருவாய்களுக்கும் உத்தரவாதமோ அல்லது வாக்குறுதியோ அல்லது முன்னறிவிப்போ அளிக்கவில்லை.
இது பரோடா பிஎன்பி பாரிவாஸ் மியூச்சுவல் ஃபண்ட் வழங்கும் ஒரு முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு முனைவு. ஆவணப்படுத்தும் தேவை/ ஒன்-டைம் உங்கள் வாடிக்கையாளர் தெரிந்து கொள்வதை (கேஒய்சி) பூர்த்தி செய்யும் செயல்முறை பற்றிய விவரங்கள், முகவரி மாற்றம், வங்கி ஆணை செபி இணையதளத்தில் புகாரை பதிவு செய்தல் போன்றவற்றுக்கு தயவுசெய்து வருகை தரவும் https://www.barodabnpparibasmf.in/investor-centre/ information-on-kyc தயவுசெய்து பதிவு செய்த மியூச்சுவல் ஃபண்ட்களை மட்டுமே வாங்குங்கள். அவற்றின் விவரங்களை செபியின் இணையதளத்தில் “இடைத்தரகர்கள்/ சந்தை அடிப்படை நிறுவனங்கள்” என்ற தலைப்பின் கீழாக சரிபார்க்கலாம். தனிநபர்களுக்கான வரிச் சிக்கல்களுக்கு, முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் முன்பாக தங்கள் நிதி ஆலோசகர்களிடம் ஆலோசனை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பரோடா பிஎன்பி பாரிபாஸ் மியூச்சுவல் ஃபண்ட் தொடர்பான எல்லாப் புகார்களையும் service.@barodabnpparibasmf.in-க்கு அனுப்பி வைக்கவும் மற்றும்/ அல்லது www.scores.gov.in-க்கு (செபி ஸ்கோர்ஸ் இணையதளம்) வருகை தரவும். எஸ்ஜபிகள் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வருகை தரவும் https://www.barodabnpparibasmf.in.SIP

**மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை. திட்டம் சார்ந்த ஆவணங்களை கவனமாகப் படியுங்கள்.**